பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 4 (20-9-67) புதன் ★ வெளியூர் : புரட்டாசி 5 (21-9-67) வியாழன் [இதழ் : 82

கூவம் ஆற்றுச் சீரமைப்புத் திட்டம்

எழில் குலுங்கப் பயன் கிடைக்கும் வாணிபத் திட்டம்!

சென்னைக்கு உள்ளே கூவம்--சென்னையை ஆந்திரத்தோடு இணைக்க பக்கிங்காம் கால்வாய்!

விரைந்து முடித்திடுவீர்!- செலவைக் குறைத்துச் செய்திடுவீர்!

பொறியியல் வல்லாருக்கு முதலமைச்சர் அண்ணா கனிவான வேண்டுகோள்!

சென்னை, செப். 20—

"இந்தக் கூவம் ஆற்றுத் திட்டம் எழில் மேவும் ஒரு திட்டம். நம் நாட்டில் இயற்கையாகவே அமைந்துள்ள சிறப்புகள் தகுந்த முறையில் கையாளப் பெற்றால் எழிலும் கிடைக்கும்—பயனும் ஒருசேரக் கிடைக்கும்.

"இந்தத் திட்டத்தோடு இணைந்த பக்கிங்காம் கால்வாய்த் திட்டம், அவசரத்தில் சேர்த்த திட்டமல்ல; அது ஒரு வாணிபத் திட்டம். இரயிலைவிட—மோட்டார் லாரிகளை விட உள்நாட்டில் படகுகள் மூலமாகப் பண்டங்களை ஆறுகளில் ஏற்றிவருவதே சிக்கனம் ஆகும்.

"பக்கிங்காம் கால்வாய்த் திட்டம், ஆந்திரத்தையும்—தமிழகத்தையும் வாணிகத் துறையில் இணைக்கிற திட்டம்! அந்தச் சாதனம் பாழாகி, பல வருடங்களாகத் தூர் வாரப்படாமல் பயனற்றுக் கிடக்கிறது! முயன்று தூர் அகற்றினால், 'சென்னைக்கு உள்ளே போக்குவரவுக்குக் கூவம்' என்றால், 'சென்னையையும்—ஆந்திரத்தையும் இணைத்திட பக்கிங்காம் கால்வாய்' என்ற நிலை உருவாகி எழில் குலுங்க இருக்கிறது என்பதோடு, தகுந்த பயனையும் வாணிபத் திறனையும் இந்தத் திட்டங்கள் மூலம் பெற இருக்கிறோம்; அதன் துவக்கமே இந்தக் கால்கோள் விழா"

என்று தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள், நேற்று மாலை, கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் விளக்கினார்கள்.

கூவம் ஆற்றின் வடகரையிலே—ஆற்றை நோக்கியபடி அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலிலே — ஐந்து அமைச்சர்கள் வீற்றிருந்து அணிசெய்ய— கூவம் ஆற்றுச் சீரமைப்புத் திட்டத் துவக்க விழா சிறப்பாகநடைபெற்றது.

விழாவுக்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமைதாங்கினார்.

அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி, எஸ். ஜே. சாதிக் பாட்சா, மா. முத்துச்சாமி ஆகியோர்உரை நிகழ்த்தினர்.

பாசனப் பகுதித் தலைமைப் பொறியாளர் ஜே. இ. வாஸ், அனைவரையும் தமிழில் வரவேற்றார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வெகுகாலமாகத் துர்நாற்றம் வீசிக்கொண்டு—சென்னை நகரத்துக்கே ஒரு கெட்ட பெயரை உண்டாக்கிக்கொண்டு—ஒரு வரை ஏசவேண்டுமென்றால் அதற்குப் பயன்பட்டுக் கொண்டிருந்த ஆறு. இனி ஒரு சிறப்பிடம் பெற இருக்கிறது!

வேறு எந்த ஆற்றுக்கும் இப்படி சேர்ந்தாற்போல் ஐந்து அமைச்சர்கள் சென்றிருப்பார்களா என்பது சந்தேகந்தான்!

அழுக்காறு நல்ல ஆறாக மாற்றப்படவே இத்தனை அமைச்சர்களும் இங்கே கூடி இருக்கிறார்கள்!

வெகு காலமாகக் கூவம் பற்றியும், அதன் நாற்றத்தால் சென்னை நகருக்கு ஏற்படும் தொல்லை பற்றியும், அதை நீக்கும் வழிமுறைகள் பற்றியும் பல முறை பேசியிருக்கிறோம்.

இந்த அழுக்கு ஆறு, புறப்படும் இடத்திலேயே இப்படி அழுக்கோடு புறப்படவில்லை; அலைந்து திரிந்து—வளைந்து ஓடி—அழுக்கையெல்லாம் சேர்த்துக்கொண்டு வந்து—கடலில் கலக்குமுன், 'ஐயோ! இவ்வளவு அழுக்கோடா நாம் கடலுக்குள் கலப்பது? அழுக்கைச் சென்னை நகர மக்களுக்கு விட்டுவிடுவோம்' என்று விட—சென்னை நகர மக்களோ, 'நமக்கு இந்த நாற்றம் தாங்காது' என்று கடலில் தள்ள—கடலில் இருந்து கரை நோக்கிப் பாயும் அலைகளோ, 'இவ்வளவு அழுக்கா?' என்று அழுக்கை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பித் தள்ள—கூவம் ஆறு நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது!

சென்னை நகர மக்களுக்கும் கடலலைகளுக்கும் போராட்டம் உள்ள அந்த நிலையில்தான், பொறியியல் நிபுணர்கள் இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள்.

வரை படத்தில் காட்டப்பட்டுள்ள எழில் தோற்றம், வெறுங் கற்பனைத் தோற்றமல்ல! ஐந்து ஆண்டுகள் திட்டமிட்டு வேலை செய்தால், உண்மையில் பெறக்கூடிய தோற்றம் அது! அதற்கான துவக்க விழாதான் இது!

மற்ற மற்ற நாடுகளில் ஒரு பெரிய நகருக்கு ஊடே ஓர் ஆறு ஓடுகிறது என்பதே ஒரு தனிச் சிறப்பு! 'இலண்டன் மாநகருக்குள்ள பெருமையே, நடுவிலே ஓடும் தேம்ஸ் நதிதான்' என்று போய்வந்தவர்கள் சொல்லியும், படித்தும் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

அதுபோலவே, சென்னை நகரின் நடுவிலே ஓடும் இந்த ஆற்றைத் தூய்மை செய்து—எழிலுள்ள தாக்கிப் பூங்காக்களை வளர்த்து—நடைபாதைகளை அமைத்து—பூங்காற்றைப் பெற மக்களுக்குக் கிடைத்த நல்வாய்ப்பாகவே இதைக் கருதுகிறேன்.

இயற்கையாய் அமைந்து சென்னை நகருக்கு நடுவிலே ஓடும் இந்த ஆறு—சில வேளைகளில் வெள்ளப்பெருக்கெடுத்தோடும்! பல நேரங்களில் சேறும் சகதியுமாய் நாறும்! மக்கள் குடியிருக்கும் இடமாகவும் மாறும்! ஆனால், எல்லா நேரங்களிலும் சட்டத்துக்குப் புறம்பாக அசுத்தம் செய்ய வாய்ப்பான இடமாகவே அது இருந்துவருகிறது!

இதனை ஒழுங்குபடுத்த, இரண்டாம்—மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டங்களின்போது கூவம் ஆற்றைப் பற்றியும், பக்கிங்காம் கால்வாய் பற்றியும் பலமுறை பேசப்பட்டன. தமிழக அரசும், மாநகராட்சியும் அடிக்கடி அது பற்றித் திட்டம் தீட்டினார்கள்; நான்கூட அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டிருப்பதாக நினைவு.

திட்டங்கள் தீட்டப்பட்டனவே தவிர, அப்போதைய அமைச்சர்களுக்கு வேறு வேறு வேலை

(4-ம் பக்கம் பார்க்க)

புறத் தூய்மைக்கான திட்டம்!

"இந்தக் கூவம் ஆற்றுத் திட்டம்பற்றிப் பேசுகையில், சட்டமன்றத்தில், 'ஒரு காலத்தில் வள்ளல் பச்சையப்பரும், அவரைச் சேர்ந்தவர்களும் நீராடி மகிழ்ந்த ஆறு' என்றெல்லாம் பேசினார்கள்.

"நலமழிந்த நிலையில் வந்திருக்கும் குடும்பப் பெண்ணைப் போல் இந்த ஆறு இருப்பதாக சட்டமன்ற மேலவையில் திரு பாலசுப்பிரமணிய (அய்யர்) அவர்கள் பேசினார்கள்.

"நீலிக்கண்ணீர் வடித்துக் குழப்பம் உண்டாக்கும் சிலரைப் போல் இந்த ஆற்றில் அழுக்கு நீரெல்லாம் சேர்ந்து குழப்பி அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றன!

"'புறந் தூய்மை நீரான் அமையும்; அகந் தூய்மை வாய்மையாற் காணப் படும்" என்ற வள்ளுவர் வாக்குப்படி, அகந் தூய்மை காட்டும் வாய்மையைக் கோட்டை வாயிலில் காட்டி இருக்கிறோம்! நீரான் அமையும் புறத் தூய்மைக்கான திட்டமே இது!

"இந்தத் திட்டத்திற்காக, 'சென்னை மாநகராட்சியின் உதவியும் தேவை' என்று பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்னார்கள். எந்த நேரத்திலும் தேவைப்படும் உதவியைச் செய்வதில் சென்னை மாநகராட்சி துணையாக இருக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

"இந்தத் திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்; அவர்கள், தொட்டதை விட்டதில்லை! சுடச்சுட ஒளிரும் பொன் போல்—அவர்கள் கை பட்டதெல்லாம் ஒளி பெற்று வருகிறது! அதேபோல், இந்தத் திட்டமும் நலமே முடிந்து சிறப்பைத் தரும்!"

—உள்ளாட்சித் துறை அமைச்சர்

மா. முத்துச்சாமி

(கூவம் சீரமைப்புத் திட்டத் துவக்க விழாவில்)

தூத்துக்குடி திட்டம் உறுதி!

டில்லி அமைச்சர் காட்டும் ஆர்வம்-- அண்ணா நம்பிக்கை

சென்னை, செப், 19—

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் நிறைவேற்றப்படுவது உறுதியாகிவிட்டது!

இத்திட்டம் பற்றி, மத்திய போக்குவரத்துத் துறையமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவுடன் கலந்துரையாடிய முதலமைச்சர் அண்ணா அவர்கள், '1971--72ல் திட்டம் செயல்படத் துவங்கலாம்' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"மத்திய அமைச்சர் இத்திட்டத்துக்குச் சாதகமாகவே இருக்கிறார்" என்று அண்ணா மேலும் தெரிவித்தார்.

"எதிர்பார்க்கப்படும் சரக்குப் போக்குவரத்து மிக நன்றாகவேயிருக்கிறது; எனவே, திட்டத்தைக் கைவிடும் பேச்சே கிடையாது" என்று டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் தெரிவித்ததாக அண்ணா கூறினார்.

1975—76-ல் தூத்துக்குடித் திட்டம் தன்னிறைவு பெற்று விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பரில் திட்டம் ஏற்பு--- மத்திய அமைச்சர் அறிவிப்பு!

"தூத்துக்குடித் திட்டத்தை மத்திய அமைச்சரவை நவம்பரில் ஏற்கலாம்" என்று அமைச்சர் டாக்டர் ராவ் நம்பிக்கை தெரிவித்தார்.

இத்திட்டம் பற்றிய தமது அறிக்கையை அக்டோபர் இறுதியிலோ, நவம்பர் துவக்கத்திலோ மத்திய அமைச்சரவையிடம் ஒப்படைத்துவிடப்போவதாக அவர் தெரிவித்தார்.

சேலம் உருக்காலை! மத்திய அமைச்சர் கருத்து

"சேலம் உருக்காலைத் திட்டம் நான்காவது—ஐந்தாவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதனால் அதைக் கைவிட்டுவிட்டதாகப் பொருளில்லை" என்று மத்திய போக்குவரத்து அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இங்கு விளக்கினார்.

"நிதி வசதி இருந்தால் நாட்டில் மேலும் பல உருக்காலைகளை ஏற்படுத்தலாம்" என்றார் அவர்!

நாளை

காமராசரின் 'நூல்' ஆராய்ச்சி

நாளை (21—9—67) 'நம் நாடு' இதழில் வெளிவரும்.

தென்னரசுக்குத் தங்கப் பதக்கம்

அமைச்சர் கருணாநிதி வழங்குகிறார்

21—9—67 இரவு 9-மணிக்கு அருப்புக்கோட்டை நகர தி. மு. க. சார்பில் சிவன் கோயில் திடலில் தோழர் எம். எஸ். இராமசாமி தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சிறைசென்று மீண்ட தோழர்கட்குப் பாராட்டு வழங்கி, மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசுக்குத் தங்கப் பதக்கம் வழங்குவார்.

தோழர்கள் சிவசண்முகசுந்தரனார், ப. பெ. ந. நல்லதம்பி ஆகியோர் பேசுவர்.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 4 (20—9—67) புதன்

சீரணியின் சிறப்பு--

காங்கிரசார் அறியட்டும்!

'சீரணி' என்ற பெயரிய ஊதியம் பெருத உழைப்பாளர் படை ஒன்றை, மாவட்டங்கள்தோறும் உருவாக்கப்போவதாகத் தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார். அப்படையின் செலவுக்கென ஒரு சிறு தொகையையும், தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் ஒதுக்கியிருந்தார்.

சீரணி அமைப்புப் பற்றி முதலமைச்சர் வெளியிட்டதைக் கேட்டதும், கழக ஆட்சியைத் தாக்கத் தங்களுக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்புக் கிடைத்துவிட்டதாகக் காங்கிரசுப் பெருந்தலைவர்கள் தீர்மானித்துக்கொண்டனர். சட்டப் பேரவையில் எதிர்க் கட்சியாக உள்ள காங்கிரசு உறுப்பினர்களும், சீரணி ஏற்பாட்டைப்பற்றி, தங்களுக்குரிய கற்பனைத் திறன் அனைத்தையும் காட்டி. குறைத்துப் பேசினர்.

"'சீரணி' என்ற போர்வையில், கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மக்கள் வரிப் பணத்திலிருந்து வாரித் தர, முதலமைச்சர் திட்டமிட்டுவிட்டார்" என்றனர் சில காங்கிரசு உறுப்பினர்கள்!

"பொதுமக்கள் வரிப் பணத்தை, ஓர் அரசியல் கட்சிக்கு வலிவு தேடிக்கொள்ளப் பயன்படுத்துவது முறையா?" எனவும் வினவி வாதிட்டனர், அவர்களில் சிலர்!

"வரிப் பணத்தை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுத்து, கட்சிக்கென ஒரு தனிப் படையை உருவாக்கிக்கொள்ளுவது 'பாசிசம்'" என்றனர், அவர்களில் மேலும் சிலர்!

"சீனுவிலுள்ள செங்காவலர் போன்றதோர் அமைப்பாகத்தான் இந்தச் சீரணிப் படையும் செயல்படப்போகிறது" என அச்சம் தெரிவித்தனர், அவர்களில் வேறு சிலர்!

சீரணிப் படையைக் குறித்துக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும், தூற்றல்களுக்கும், முதலமைச்சர் அவர்கள் தக்க முறையில் பதிலளித்தார்;—'ஒரு சல்லியும் ஊதியம் பெருமல், பொதுப் பணியில் ஈடுபடுவதே 'சீரணி'யின் குறிக்கோள்' என்றார்; 'அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி—அரசியல் கட்சிகள் எதிலும் தொடர்பில்லாதவர்களும் சரி—சீரணிப் படையில் சேர்ந்து, சமுதாயப் பணிகளை மேற்கொள்ளலாம்' என்ற விளக்கத்தையும் அவர் தந்தார்.

முதலமைச்சர் மனந்திறந்து கூறிய இவ்விளக்கங்கள் எதற்கும், காங்கிரசுக் கட்சியினர் செவிசாய்க்கவில்லை; 'கழக ஆட்சியைத் தாக்க ஏதாவது ஒன்று கிடைக்காதா?' எனத் துருவித் துருவித் தேடிக்கொண்டிருப்பதையே தங்கள் அரசியல் பணியாகக் கொண்டிருக்கின்ற காங்கிரசார், முதலமைச்சர் மனத் தூய்மையுடன் தந்த சீரணி பற்றிய விளக்கத்தைக் கேட்கவும், தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளவும் முன்வருவார்களா?

சீரணிப் படையைக் குறித்துத் தூற்றிவருவதும், திரித்துக் கூறிவருவதும் மட்டுமே காங்கிரசுக் கட்சியினருக்கு மனநிறைவு தருவதாக இல்லை; எனவே சீரணிப் படைக்கு எதிராகத் தாங்களும் ஒரு படையைத் துவங்கப்போவதாக விளம்பரம் செய்தனர். அதற்குத் தகுதிவாய்ந்த ஓர் ஆளையும் பிடித்து, அந்த ஆற்றல்மிக்கவரைத் தலைவராகக் கொண்ட படை ஒன்றையும் துவக்கிவிட்டிருப்பதாகச் செய்தித் தாள்களில் பெரிய விளம்பரங்களையும் செய்துகொண்டுள்ளனர் காங்கிரசார்!

ஆனல் சீரணிப் படை, காங்கிரசார் தவருகக் கற்பனை செய்துகொண்டது போன்ற அமைப்பு அல்ல! முதலமைச்சர் கூறிய விளக்கத்துக்கொப்ப, அவ்வணியின் அமைப்பும், அதன் அரும் பணியும் அமைந்துவிட்டிருக்கிறது!

சீரணியும் உருவாக்கப்பட்டது. அந்த அணியில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நீங்கலாகப் பல அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர்.

பிற அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கண்ணுல் பார்ப்பதும் தீது—அவர் சொல் கேட்பதும் தீது—அவருடன் நெருங்கிப் பழகுவதும் தீது—என்ற அடிப்படையில் அரசியலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் அல்லவா இன்றையக் காங்கிரசார்? இப்படிப்பட்ட இழிமனம் பெற்றிருக்கின்ற காங்கிரசுக்காரர்களிடம், அரசியல் கட்சி வேற்றுமைக்கு அறவே இடமளிக்காத சீரணியில் உறுப்பினர்களாகச் சேர்ந்து—தோழமை உணர்வுடன் மற்றவர்களுடன் இணைந்து—கூட்டாகப் பணிபுரியக்கூடிய பெருநெறியை எதிர்பார்க்கலாமா?

முதலமைச்சர் அண்ணு அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்ற சீரணி, எத்தகைய பணியை மேற்கொள்ளக்கூடும்? அப்பணியினுல், சமுதாயத்துக்கு ஏற்படக்கூடிய பலன் எப்படி இருந்திடக்கூடும்?

சீரணி பற்றி முதலமைச்சர் கூறிய விளக்கத்தை உறுதி செய்துவிட்டிருக்கிறது—இப்பொழுது சீரணி!

சீரணி குறித்துக் காங்கிரசார் வெளியிட்ட அச்சம் அனைத்தும் பொருளற்றது—அடிப்படையற்றது என்பது, இப்பொழுது தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது!

சென்னை நகரத்தைச் சேர்ந்த சீரணிப் படையினர், நகரத்தை அடுத்துள்ள ஊரூரில் பள்ளிக்கட்டிடம் ஒன்றைத் தங்கள் அரும் உழைப்பால் கட்டி முடித்திருக்கின்றனர். அக்கட்டிடத்தை, அண்ணு பிறந்த நாள் பரிசாகவும் ஆக்கியுள்ளனர்.

அவ்விழா, சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனுர் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய இராம. அரங்கண்ணல் அவர்கள், சீரணிப் படையைக் குறித்தும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்ருர் :—

"தி. மு. கழகத் தோழர்கள் அதிகம்பேர் இருந்தாலும், சீரணியில் பல கட்சித் தோழர்களும் உள்ளனர். இங்கு நடைபெற்றுள்ள பணியைக் கண்டு தமிழ்நாடே மகிழும்.

"இந்தக் கட்டிடத்திலுள்ள ஒவ்வொரு செங்கல்லுக்கும் ஓட்டுக்கும் பேசுகிற வாய்ப்பிருந்தால், சீரணித் தொண்டர்களும் தோழியர்களும், இந்தக் கட்டிடத்தை எழுப்ப என்ன பாடுபட்டு உழைத்தார்கள் என்பதைக் கூறும்.

"'பத்து நாட்களில் கட்டப்பட்டதாயிற்றே—வலிவுடனிருக்குமோ?'—என்று யாரும் அஞ்சத் தேவையில்லை. சிறந்த பொறியியல் நிபுணர் ஜாக்கப் அவர்களும், அவருடன் சேர்ந்தவர்களும் உடனிருந்து உழைத்துள்ளனர்.

"கட்டிடம் கட்டுவது போன்ற உடலுழைப்பு வேலைகளில் கொஞ்சங்கூடப் பழக்கமில்லாதவர்களும், இந்த வேலையில் வந்துசேர்ந்து உழைத்தார்கள்."

சீரணியின் தனி அதிகாரியாக இருந்துவரும் பரமசாமி அவர்கள், இப்பள்ளிக் கட்டிடத்தைக் குறித்துக் கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கதாகும்; அது, இது :—

"சீரணிப் படையை நமது முதலமைச்சர் அவர்கள் துவக்கிவைத்து இன்றேடு ஒரு திங்கள் முடிகிறது. இன்று அவர் கையில் இப்பள்ளிக்கட்டிடத்தை ஒப்படைக்கின்றேம்.

"இந்தக் கட்டிடத்துக்கென அரசின் நிதியிலிருந்து செலவான தொகை ரூ. 3,700 மட்டுமே ஆகும்.

"அரசின் செலவில் எத்தனையோ மாளிகைகள் தோன்றலாம்; ஆனல், இச்சிறிய கட்டிடத்துக்கு அவைகளில் எதுவும் ஈடாகாது."

இதே விழாவில் கலந்துகொண்ட புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தம் பேச்சில் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும் :—

"சீரணிப் படைத் திட்டத்தை மிகுந்த அடக்கத்தோடு அறிவித்தார் அண்ணு. மற்றவர்கள் கண்டு வெட்கப்படும்படியாக அதன் வேலை சிறப்புற நடந்தேறி வருகிறது. இனிமேல்தான் சீரணிக்கு நிறைய வேலை இருக்கிறது. தமிழ்நாடு முழுதும் இத்தகைய பணிகள் தொடர்ந்து நடக்க வேண்டும்.

'இந்தியத் துணைக்கண்டத்துக்கே வழிகாட்டுவதாகச் சீரணிப் படை அமைய வேண்டும்—ஏன்—உலகுக்கே வழிகாட்டுவதாக விளங்கட்டும்."

சீரணி எதற்கு? அது மேற்கொள்ளக்கூடிய பணி எத்தகையது? சமுதாயத்துக்கு அதனுல் ஏற்படக்கூடிய பலன்கள் என்ன?—என்பதற்கெல்லாம் இனி விளக்கம் கூறிக்கொண்டிருக்கத் தேவை இல்லை. ஊரூரில் சீரணியினுல் கட்டி முடித்திருக்கின்ற பள்ளிக்கட்டிடம் தக்கதோர் விளக்கமாகும்.

இப்பள்ளிக்கட்டிடத்தைப் பார்த்த பின்னராவது, சீரணி குறித்துத் தாங்கள் கொண்டிருந்த தவருன கருத்தை மாற்றிக்கொள்ளுவதுடன், சீரணியில் உறுப்பினர்களாகச் சேருவதற்கும் காங்கிரசுக் கட்சியினர் முன்வர வேண்டும். உறுப்பினராக விரும்பவில்லையாளுலும், சீரணி பற்றித் தாங்கள் கூறிவருகின்ற கற்பனைக் கதைகளையாவது மறந்திட வேண்டும்.

—கா. க.

இரண்டு 'சீனு'க்கள்--

இரு இந்தியத் தலைமையமைச்சர்கள்!

உள்ளும் புறமும்

கோழி முட்டையை ஒரு தடவை தான் உடைக்க முடியும்!

ஆனல், புதுடில்லியிலுள்ள வெளி விவகார இலாகாவினர், அதை ஒட்ட வைத்து, 'மீண்டும் உடைக்க முடியுமா' என்று பார்க்கிருர்கள்!

'மொரார்ஜி தேசாய், நிதியமைச்சர் மட்டுமே' என்று காங்கிரசில் எண்ணிக் கொண்டிருப்பவர்கள், இனியாகிலும், 'அவர் ஒரு துணைத் தலைமையமைச்சரும் கூட' என்பதனை உணர்ந்து கொள்ளட்டும்!

'மொரார்ஜி தேசாய், ஒரு நிதி அமைச்சரும், துணைத் தலைமை அமைச்சரும் மட்டும்தான்' என்று நினைக்கும் காங்கிரசல்லாதவர்கள், இனியாகிலும், அவர், இரண்டுக்கும் 'மேம்பட்டவர்' என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்!

நாட்டின் தலைமையமைச்சர் பதவிக்கு இரண்டு தடவை போட்டியிட்டு, வெற்றிகரமாகத் தோல்வியை ஒப்புக்கொண்டவர் என்பதை, அவர், எந்த நேரமும் காண்பித்துக் கொண்டுதான் இருக்கிருர்!

'சமரசத்துக்காகவும், சமாதானத்துக்காகவும்தான் துணைத் தலைமையமைச்சர் பதவி' என்ற நிபந்தனையுடன் போட்டியைத் தவிர்த்துக்கொண்ட இந்திரா காந்திதான், உண்மையிலேயே தோல்வியைத் தழுவ ஆரம்பித்திருக்கிருர்!

டோக்கியோ — இலண்டன் — வாஷிங்டன்—இந்த மூன்று தலைநகர்களிலும் மொரார்ஜி தேசாயின் நடவடிக்கைகளை உற்றுக் கவனித்தவர்களுக்கு, மேற்கண்ட நிலைமைகள் நன்ருகப் புரியும்!

மூன்று இடங்களுக்கும் போவதற்கு முன்னரே, சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் ஓர் ஒத்திகையைக் காண்பித்தார்!

சாக்ளா வெளியே போனதற்கும், இந்தி பேசாத மாநிலங்களின் உள்ளக் குமுறல்களை மீண்டும் ஒரு முறை கிளறிவிட்டதற்கும், 'மொரார்ஜி தேசாய், அங்கே இங்கிதம் தெரியாமல் நடந்து கொண்டதுதான் காரணம்' என்ற பேச்சு இன்னும் ஓயவில்லை!

அதற்குள்ளாக விமானமேறி, உலகின் மூன்று முக்கிய நாடுகளுக்குச் சென்றிருக்கும் அவர், அடுத்தடுத்து சில சூடான பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிருர்!

டோக்கியோவிலும், இலண்டனிலும், இந்திய வெளிநாட்டுக் கொள்கை பற்றி அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் வழக்கமாக உதவி கேட்கச் செல்லுபவர்கள் ஒப்புக்காகச் சில சொல்லுவார்களே — அது போல் இல்லை! 'நேருவின் கொள்கை மறைந்துவருகிறது' என்பதை மறைமுகமாகத் தெரிவித்திருக்கும் அவர், இந்தியாவை, 'கம்யூனிச எதிர்ப்புக் கூட்டணியின் ஓர் அங்கம்' போல் வெளிப்படையாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிருர்!

அமெரிக்கா சென்றவுடன், அதற்கும் மேலாக ஒரு படி சென்று,

'இரண்டு சீனுக் கொள்கையை இந்திய அரசு ஏற்கிறது'

என்ற கருத்தில் பேசியிருக்கிருர்!

"மக்கள் சீனுபோல், பார்மோசாவும் ஒரு நாடுதான்" என்று அவர் தெரிவித்திருக்கிருர்; 'சீனு என்று அழைப்பதில் வேண்டுமானுல் தவறு இருக்கலாமே தவிர, பார்மோசாவை ஒரு நாடு எனக் கொள்வது சரியே' என்று கருத்துத் தெரிவித்திருக்கிருர்!

இத்தனை ஆண்டுக் காலமும், சுதந்தர இந்தியா கடைபிடித்து வந்த வெளிநாட்டுக் கொள்கைக்கு, இது நூற்றுக்கு நூறு தவருனதாகும்.

மா சே-துங், 'பார்மோசாவைப் பிடிப்போம்' என்று மனமார நம்புகிருரோ இல்லையோ—இந்திய அரசு அதற்கு உளமார ஒப்புதல் அளித்து வந்திருக்கிறது!

ஐ. நா.-வில் இடம் பெற்றிருந்த போதிலும், பார்மோசாவை ஒரு நாடு என இந்தியா அங்கீகரித்தது கிடையாது!

1962-ம் ஆண்டுகூட, உலகமே உற்றுக் கவனித்தது; அந்த நேரத்தில், இந்தியா என்ன சொல்லியது?—

"ஆக்கிரமிப்பு என்பது வேறு; அந்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்க வேண்டுமென்றுலும், மக்கள் சீனுவை ஐ. நா.-வில் இடம் பெறச் செய்வதுதானே சிறந்த வழி?"

என்று வாதாடப்பட்டது.

ஆனல் வாஷிங்டனில் தேசாய் கூறியிருக்கிருர்—'மக்கள் சீனு போல் பார்மோசாவும் ஒரு நாடுதான்' என்று! 'பீகிங்போல் தைவானும் ஒரு தலைநகரமே' என்பதாக!

பதறிப்போய், 'அப்படியா?' என்று தொலைபேசியில் கேட்டிருக்கிறது — புதுடில்லியிலுள்ள வெளிவிவகார அமைச்சகம்!

"ஆமாம்; அப்படித்தான்; பேசியதில் தவறு என்ன? பேசியதும் உண்மைதான்" என்று இந்தியத் தூதுவரகம் மூலம் செய்தி அனுப்பியிருக்கிருர் தேசாய்!

"தேசாய் வாஷிங்டனில் பேசியது எப்படியோ—தெரியாது. இந்தியா, ஒரு சீனுவைத்தான் அங்கீகரிக்கிறது"

என்று இப்போது புதுடில்லி சொல்லுகிறது!

"ஒரு நாட்டின் துணைத் தலைமையமைச்சர் கருத்துக்கு மறுப்பும், விளக்கமும் அளிக்கிறது—வெளிவிவகார அமைச்சரவை!

வெட்கப்பட வேண்டிய மெச்சத் தகுந்த காரியம்!

நடுக்கடலில், 'கப்பல் தலைமை' மாறுவதை கதைகளில் படித்திருக்கலாம் — திரைப் படங்களில் பார்த்திருக்கலாம்!

மூழ்கப் போகும் கப்பலாகக் காங்கிரசு சித்தரிக்கப்படுகிறது—

(3-ம் பக்கம் பார்க்க)

சிவாஜியும் 'சிவ சேனை'யும்!

பீகிங்கில் கம்யூனிஸ்டுகள் இன்று நடத்திவரும் மனிதவேட்டையின் கொடூரப் பின்னணியில், இலண்டனில் கார்ல் மார்க்ஸ் அன்று சிந்தித்த புனிதக் கருத்துக்களை எடைபோட்டுப் பார்ப்பது நியாயமல்ல!

உலகத்தின் பல்வேறு 'மூல ஆசான்'களை, அவர்களுக்குப் பின்னால் வந்த சீடகோடிகள் சிதைத்துக் குலைத்துக் கூறுபோட்டுச் சிரிப்புக்கு ஆளாக்கிவிட்ட அவலத்திற்கு, மார்க்ஸ், விதிவிலக்காகவில்லை!

அதேபோல், இன்று சிவாஜியும், பம்பாய் நகரத்துச் சந்துமுனை 'வஸ்தாது'கள் சிலரிடம் சிக்கித் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்!

சிவாஜியின் வீரம், தனி மனிதர்களைக் குறிவைத்துத் தாக்கும் தெருச் சண்டைக்குப் பயன்பட்டதில்லை! அவருடைய திண்மையும் அவர் படையினருக்கிருந்த சிறப்பும் ஒழுக்கமும், வரலாறு கண்டவை—அடுத்துவந்த சில தலைமுறையினர் வாழ்வுக்கு வழிகாட்டியவை!

அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு இன்று பம்பாயிலும், கோலாப்பூரிலும் திரிந்துவரும் சிவாஜி சேனை, இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டிருப்பது, வேதனைக்குரியதாகும்!

சிவாஜியை அன்று எதிரிகளால் அவ்வளவு எளிதாகத் தோற்கடிக்க முடியவில்லை! இன்று அவரைச் சார்ந்தவர்களாகத் தங்களைச் சொல்லிக்கொள்வோர், சிவாஜியின் பெயரை வெகு சுலபமாகக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்!

"ஆண்டவனே! என்னை என் நண்பர்களிடமிருந்து காப்பாற்று! எதிரிகளை நான் பார்த்துக் கொள்கிறேன்"

என்று மனம நொந்து வால்டேர் ஒருமுறை சொன்னதைப்போல், இன்று சிவாஜியும், அவர் நம்பி ஒழுகிய ஆண்டவனிடம், தன் கல்லறையிலிருந்தே கண்ணீர்விட்டுக் கதறக்கூடும்!

மொகலாயர் வரலாற்றை சிவாஜி 'கவனித்து'க் கொண்டார். அவருடைய 'சீடர்'களிடமிருந்து அவருக்குற்ற நற்பெயரைக் காப்பாற்றுவதுதான், இன்றைக்குள்ள பிரச்சினை!

மொகலாயப் பேரரசுடன்தான் சிவாஜி போராடினார்! அதை முஸ்லிம்களோடு நடத்திய போராட்டமாக மத வெறிபிடித்த சில வரலாற்றாசிரியர்கள் கயிறு திரித்தார்கள்! அதனால் ஏற்பட்ட வகுப்புக் கலவரம், எத்தகைய இழப்புக்களை நம்மீது சுமத்திற்று என்பதை நாம் அறிவோம்!

சிவாஜியின் நினைவுகூர்ந்து சீரிய படிப்பினையைப் பெற்றவர்களைக் காட்டிலும், அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு அழிவு வேலை செய்தவர்களே வடக்கில் அதிகம்!

'அவுரங்கசீபை சிவாஜி எதிர்த்தார்' என்பது மட்டுமே வடக்கில் வாய்கிழியப் பேசப்படும் வரலாறு! சிவாஜியின் தருக்குண்மை—அரசியல் அறிவு—அரசாட்சி நிலைமை—அவருக்கிருந்த குறிக்கோள்—அத்தனையும் ஒழுங்காகத் தென்னகத்தில் தான் சிறப்பிக்கப்படுகின்றன!

சிலந்தி வலை பின்னுவதுபோல், மொகலாயப் பேரரசு வடக்கில் பின்னிய அரசியல் வலைக்குத் தப்பி அதிக நாள் போராட முடியாது என்பதை உணர்ந்த சிவாஜி, தென்னகத்தில்தான் தமது நிலையான அரசியல் வாழ்வை அமைத்துப் போராட்டத்தை நீடிக்க முடியும் என்று நம்பினார்! தனது மரபுப் புகழ் தழைப்பதற்கு, அமைதியும், வீரத்தை மதிக்கும் பண்பும் கொண்ட தமிழகமே சிறந்ததாக அவர் தேர்ந்தெடுத்தார்!

தமிழகத்தில்—தஞ்சை, செஞ்சி, வேலூர் கோட்டைகள், தமிழர்களால் அனுமதிக்கப்பட்டுச் சிவாஜியின் ஆட்சிக் கொடி பறந்த இடங்களாகும்!

அவுரங்கசீபின் சீற்றத்திற்கு இலக்காகாமலும், அவருடைய படைபலத்திற்கு இரையாகாமலும் சிவாஜியின் குடும்பம் தங்கி வாழ்ந்து, அரச மரபைக் காத்துக் கொள்வதற்குக் கடைசி காலத்தில் சிவாஜிக்கு உதவி செய்து உறுதுணையாக நின்றது தமிழ்நாடுதான்!

சிவாஜியின் மகள் அம்பிகா பாய், மராட்டியத்திற்குப் போவதற்கு மனமில்லாமலே தமிழகத்தின் வேலூர்க் கோட்டையில் தன் வாழ்நாளைக் கழித்தாள்! சிவாஜியின் இரண்டாவது மகன் இராசாராம் என்பாரின் மனைவி, செஞ்சிக்கோட்டையில்தான் மானத்தோடு வாழ முடியும்' என்று வாழ்ந்தாள்—அங்கேயே இறந்தாள்!

சிவாஜியின் வீரமும் நாட்டுப் பற்றும் முழுமையாகத் தெரிவதற்கு இடங்கொடுத்தவை, புனாவும் பீஜப்பூரும் அல்ல! அவை, தஞ்சையும் வேலூருமே! வேலூர்க் கோட்டையில்தான் 1678-ம் ஆண்டில் ஒரு நாள், 'விஜயநகரப் பேரரசின் வழிவந்தவன்' என்று தன்னைப் பெருமையாகச் சொல்லி, சிவாஜி முடி சூட்டிக்கொண்டார்!

விஜயநகரப் பேரரசு, முற்றிலும் தென்னகப் பெரும் புகழையும், அதன் தனி மரபையும் காக்கத் தோன்றிய குடிக்கோன் அரசாகும்! மக்களின் ஒருமித்த ஒப்புதலுடன் அமைந்த ஒரு குழுவின் தலைவனால் துவக்கப்பட்டது விஜயநகரப் பேரரசு! வடக்கின் வாடை தென்னகத் தென்றலோடு முட்டிக்கொள்ளாதபடி சில நூற்றாண்டுகளுக்குக் கண்காணித்தது அந்த அரசு!

விஜயநகரப் பேரரசின் துவக்கமும் வாழ்வும், யாருடைய மண்ணையும் பலாத்காரமாகப் பிடுங்கித் திணிப்பதாக இருந்ததில்லை!

'பலமற்ற—படை மிகுதியற்ற அரசுகளை, பலமுள்ள யாரும் தாக்கிச் சூறையாடக்கூடாது - சூறையாட விடமாட்டோம்' என்று தென்னகத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்கிக்கொண்டதாகவே அந்த அரசு சிறிது காலம் செயல்பட்டது!

விந்தியத்தின் விளிம்பில் அமைக்கப்பட்ட வேலியாக—காவற் கோட்டையாக அமைந்திருந்தது, விஜயநகரப் பேரரசு! இந்தப் பேரரசின் வழிவந்தவனாகச் சொல்லிக்கொண்ட சிவாஜியின் பெயரைச் சொல்லிக்கொள்ளும் இன்றைய 'சிவாஜி சேனை', 'தென்னகத்தார்தாம் நமக்கு எதிரிகள்' என்று சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்த்து நாம் அழுவதா? சிரிப்பதா?

சிவாஜியின் மறைவுக்குப்பின், மொகலாயர் புகழ்பாடி அவர்கள் அளித்த பதவிக்கும், பொருளுக்கும் பல்லிளித்து நின்றன மராத்திய அரசுகள்! சிவாஜியின் மரபையும், அவர் சந்ததியினரையும் நெடுங்காலத்திற்குக் காத்தது, தமிழகம்! தஞ்சையின் மராத்திய குல மன்னர்களைத் தமிழ் மன்னர்களின் வரிசையிலேயே வைத்து மதித்தது தமிழகம்!

அம்மன்னர்களின் ஆட்சியில, தமிழ், 'ஓகோ' என்று வளர்க்கப் படவில்லையானாலும், உரிய மதிப்பு அளிக்கப்பட்டதில் தமிழகம் திருப்தி கண்டது!

இன்றைக்கும் தஞ்சை அரண்மனை—சரசுவதி மகால்—அதிலுள்ள புத்தகசாலை ஆகியவைகள், தமிழர்களால் பெருமையுடன் போற்றப்படுபவை—விரும்பிப் பாதுகாக்கப்படுபவை!

சரசுவதி மகாலில் உள்ள மராத்திய நூல்களை, தமிழ் நூல்களுக்கு ஒப்பாகவே மதித்துத் தனது கருவூலமாகத் தமிழகம் காப்பாற்றி வருகிறது!

தஞ்சையில் மராத்தியர் வழிவந்த சரபோஜி மன்னரின் நினைவாலயமாக, சரபோஜி கல்லூரி ஒன்றும் அரசாங்க ஆதரவோடு இயங்கிக் கொண்டிருக்கிறது!

மராட்டியத்தின் மாண்பினைத் தமிழகம் ஒப்புக்கொண்டதற்கான அறிகுறிகள் அல்லவா இவை? இவைகளுக்கு ஈடாக இந்தியாவின் வேறு மூலைகளில் மராட்டியம் நினைவுகூரப்படுவதாக சிவசேனையினர் சொல்ல முடியுமா?

சிவாஜியை மராட்டியம் பெற்றிருந்தாலும், அவரை வரிப் புலியாக—வீரச் சிங்கமாக உலா வரச் செய்யத் தமிழகமே தோள் கொடுத்திருக்கிறது!

இன்று சிவாஜி சேனையினர், இந்தத் தமிழர்களிடத்தில்தான் தோள்தட்டி, வாதுக்கும் வம்புக்கும் நிற்கின்றனர் என்பது, 'நல்லதுக்குக் காலமில்லை' என்பதை மெய்ப்பிப்பதைத் தவிர, வேறென்ன?

தமிழகத்தின் பொதுப்படையான போக்கினை விடுத்து, தி. மு. கழகத்தின் குறிப்பான செயல்களை எடுத்துக்கொண்டாலும், சிவாஜிக்குப் பெருமை சேர்ப்பதாகவே அவை இருப்பதைக் காணலாம்!

தி மு. கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், எழுதிய முதல் நாடகமே 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்பதாகும்! சிவாஜியின் வீரத்தை வெளிப்படுத்தி, அப்படிப்பட்ட மாவீரனே சமயா சமயத்தில், வஞ்சகத்தின் பிடிக்குள் சிக்கித் தவித்திருக்கும் அவலத்தை விளக்குவது அந்த நாடகம்!

சிவாஜியின் பெயரை மட்டும் கேள்விப்பட்டிருக்கும் வடக்கின் மற்ற மாநிலத்தவரைக் காட்டிலும், அவர் வாழ்வையும் கூர்ந்து கவனித்த தமிழர்களின் அன்புணர்வைக் காட்டுவது அந்த நாடகம்! அந்த நாடகத்தில் சிவாஜியாக மாறி நடித்தவருக்கு, 'சிவாஜி கணேசன்' என்றே சிறப்புப் பெயர் வழங்குவதை, நியாய புத்தியுள்ள மராத்தியர் தெரிந்து வைத்திருப்பார்கள்!

மராத்தியர்களுக்கு—ஆண்ட சிவாஜியைப் பிடிக்கும்; ஆண்டவன் கணேசரையும் அவர்களுக்குப் பிடிக்கும். இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து ஒருவருக்குப் பெயராக வைத்துக்கொள்வது தமிழர்களுக்கு மெத்தப் பிடித்தமாக இருக்கும் மனவளத்தையாவது மராத்தியர்கள் சிந்தித்துப் பார்க்க நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாதா? சிவாஜி பெயரால் தங்களை அழைத்துக்கொண்டு, கணேசர் விழாவில் தமிழர்களிடம் காலித்தனம் புரியத் துணிந்த மராட்டியர்களுக்கு நினைவூட்டவே இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

மராட்டியர்களுக்கு இத்தகு மதிப்பளிக்கும் தமிழர்கள், அவர்களை—அவர்கள் வளர்ச்சியைத் தடுத்துக்கொண்டிருப்பதாகச் சிவசேனைத் தலைவர் கூறுகிறார்.

சிவாஜிக்குப் பிடித்த தமிழர்கள், 'சிவாஜி சேனை'க்கு ஏன் பிடிக்கவில்லை? இதில் பெரிய மர்மம் புதைந்திருப்பதாக யாரும் மருளவேண்டாம்! கழக ஆட்சி நடக்கும் தமிழகம், காங்கிரசுக் கட்சிக்கு அறவே பிடிக்கவில்லை—அவ்வளவே!

'சிவசேனை வேறு—காங்கிரசுக் கட்சி வேறு' என்று யாரும் நினைக்கக்கூடாது! இரண்டும் ஒன்றுதான்! இங்கு, 'வெண்புறாச் சேனை' என்ற ஒன்று துவக்கப்படுவதாகத் துண்டுத் துணுக்குகள் கூப்பாடுபோட்டுக் கொண்டிருக்கவில்லையா? அதுபோல், மராட்டியத்தில், 'சிவாஜி சேனை' துவக்கப்பட்டு, தூள் பறந்துகொண்டிருக்கிறது!

காங்கிரசு, கடைசியாக அச்சுறுத்தியும், பீதியூட்டியும், வன்முறைச் செயல்களை வரைமுறையற்றுக் கையாண்டுமே தனது வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ளும் பரிதாப நிலைக்கு இறங்கி விட்டிருக்கிறது!

சிவாஜி சேனையின் எதிர்ப்புகள், காங்கிரசுக் கட்சி அமைத்துள்ள இரண்டாவது போர் முனை! 'உறுதியான தளத்திலிருந்துதான் எதிர்த் தாக்குதல் துவங்கவேண்டும்' என்கிற இராணுவ மரபுப்படி, காங்கிரசு, மராட்டியத்திலிருந்து புதுவகையான போரைத் துவக்கியிருக்கிறது!

மாநிலப் பற்றுகளை வேரறுத்து, இந்தியாவின் கூட்டாட்சி முறையை அசைத்துப் பார்ப்பதுதான் இனி காங்கிரசுக் கட்சியின் திட்டம் போலும்!

இதற்கு அனுசரணையாக ஏதாவது செய்யவேண்டுமென்றால், அது, 'காங்கிரசுக்கு மெத்தப் பலமுள்ள மாநிலத்திலிருந்துதான் செய்யவேண்டும்' என்கிற முறைப்படி, மராட்டியத்தில் முடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது!

அது மட்டுமல்ல; இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும், துரிதமாக ஏதாவதொன்று எதிரொலிக்க வேண்டுமென்றால், அது, பம்பாய் நகரில் எழுப்பப்படும் கூப்பாடாகவே இருக்க வேண்டும்; ஏனென்றால், அந்த நகரம்தான் இந்தியாவின் மற்ற நகரங்களைக் காட்டிலும், எல்லா மாநில மக்களும் வாழ்ந்துவரும் பெருநகரமாகும்.

அங்கு 'சிவசேனை'யினர் நடத்திய சில்லறை விளையாட்டுக்களும், அவை வெகு விரைவில் எல்லா மாநிலங்களிலும் எதிரொலித்து விளம்பரம் பெற்றதும், 'திட்டமிட்டுச் செய்யப்பட்டவைதான்' என்பதை நினைத்தால், அது, திடீரெனக் கரையுடைத்து வெளியேறிய மராட்டிய உணர்வின் பிரதிபலிப்பு அல்ல' என்பது தெரியவரும்!

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 1-இலட்சம்

முதல் பரிசு! மற்றும் விவரிக்க முடியாத பரிசுகள் வேறு!

15-11-67-ல் குலுக்கப்படும்

K.P.L. டிக்கெட் வாங்குகிறவர்களுக்குக் கிடைக்கும்

ஒரு டிக்கெட் ரூ. 1.70

உடன்மணியார்டர் அனுப்பவும்

JOHN PANACHIKAL
COCHIN-2

ரோஜா

பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

'புலவர் பெருமணி'

அமைச்சர் கருணாநிதிக்குப் பெரும் புலவர் சூட்டிய பட்டம்

இன்று நடந்த அண்ணா கவியரங்கத்தைப் பாராட்டிப் பேசிய பெரும்புலவரான டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள், அமைச்சர் கருணாநிதிக்கு, 'புலவர் பெருமணி' என்ற பட்டத்தைச் சூட்டினார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உள்ளபடியே கலைஞர் கருணாநிதி அவர்களை, 'புலவர் பெருமணி' என்றே கூறலாம்.

• 'இவர் கலைஞரா?' என்று கேட்டவர்கள், அறியாதவர்கள்—கலையின் பெருமை புரியாதவர்கள்!

கருணாநிதி அவர்கள் இங்கு கவியரங்கத்துக்குத் தலைமையேற்று பாடிய பாட்டில், இயற்கையாக எழுந்த கவிதைகளை மட்டுமன்றி திருவாசகத்தைக் கண்டோம்—திருப்பாவையைக் கண்டோம்—சங்க இலக்கியத்தைக் கண்டோம்!

இத்தகைய பெரும் புலமை அவரிடத்திலே அடங்கியிருப்பதைப் பார்க்கப் பார்க்க இவரை இதேபோல் கவியரங்கங்களுக்கே தலைமையேற்கச் செய்து, நாம் அவர் கவிதைகளைக் கேட்டுக் கொண்டேயிருக்கலாமா என்று தோன்றுகிறது."

இரண்டு 'சீனு'க்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பல கருத்துப் படங்களில்!

முக்கிய மனிதர்கள் அதிலிருந்து பாய்ந்து கடலில் குதித்து வெளியேறுவதையும் காண்கிறோம்!

இந்த நிலையிலும், கப்பல் தலைமையில் ஒரு போட்டி!

கட்சிக்குள் — நாட்டில் — உலக அரங்கில், தனக்கென்று ஒரு இடத்தை—தனக்கென்று ஒரு பாதையை—தனக்கென்று ஒரு பின்பற்றுதலைச் சம்பாதிக்கும் போக்கில் செல்கிறார் தேசாய்!

சட்ட அமைச்சர்கள் மாநாட்டில்—பொருளாதாரக் கொள்கையில்—அந்நிய உதவிக்காக வெளியே போகும் இடங்களில்—அவர் நடந்துகொள்வது வேறு எதைக் காட்டுகிறது?

'சீனு இரண்டு' என்கிறாரா? அல்லது, 'இந்தியாவுக்கு இரண்டு வெளிநாட்டுக் கொள்கை' என்கிறாரா?—என்பதனை, காங்கிரசுக்காரர்கள் உட்பட எல்லோரும் முதலில் தெரிந்துகொண்டாக வேண்டியிருக்கிறது!

—எஸ். ஆர்.

புதிய கலை நிகழ்ச்சி

மணிவண்ணன்-குமாரி பத்மினி குழுவினரின் 'புயலுக்குப் பின்...?' எனும் நகைச்சுவையும் நற்கருத்தும் நிறைந்த கொள்கை விளக்க கழகப் பிரச்சார கலை நிகழ்ச்சி.

ஆக்கம்: மா. செங்குட்டுவன்.

விவரங்கட்கு:—
மணிவண்ணன்,
28, திருவள்ளுவர் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-18

ஆசிரமம் அமைக்கப் போனவர் அரசியல் சாணக்கியர் ஆகிறார்!

காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளைக் கலைக்க குல்சாரிலால் நந்தா தூதுபோகிறார்!

பீகாருக்கு அடுத்தபடியாக இப்போது மேற்கு வங்காளத்தில் உள்ள அஜாய் முகர்ஜியின் அமைச்சரவையைக் கலைப்பதில் காங்கிரசு மேலிடம் வெளிப்படையாகவும், அதிகாரபூர்வமாகவும் திட்டங்கள் தீட்டிச் செயல்பட ஆரம்பித்திருப்பதாகப் புதுடில்லித் தகவல் ஒன்று கூறுகிறது.

வங்காள அமைச்சரவையிலுள்ள கம்யூனிஸ்டுகளை அகற்றிவிட்டு, கம்யூனிஸ்டு அல்லாத கூட்டு அமைச்சரவை அமையப் பாடுபடுவதுதான் நோக்கம் என்று காங்கிரசு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்த போதிலும், நாடு முழுவதிலுமுள்ள காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளை இப்படி ஒவ்வொன்றாகக் கலைப்பதையே காங்கிரசு முக்கிய உள்நோக்கமாகக் கருதுவதாகத்தான் இது தென்படுகிறது'' எனப் பார்வையாளர்கள் கூறுகின்றனர்!

சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்திரா—நந்தா சந்திப்பு, இந்தப் பிரச்சினை பற்றியே என்றும், தலைமையமைச்சர் இலங்கையிலிருந்து திரும்புவதற்குள் நந்தாவும் கல்கத்தாவுக்குச் சென்று நிலைமைகளைக் கண்டறிந்துவர இருக்கிறார் எனவும் தெரிகிறது.

அஜாய் முகர்ஜியின் அமைச்சரவையில், மாற்றத்தை எப்படி ஏற்படுத்துவது என்பதில் மேலிடத்தில் பலவகையான கருத்துக்கள் இருந்தபோதிலும்—ஏதோ ஒருவகையில்—இன்னும் சில நாட்களில் வங்காள அரசியலில் பீகார் போன்ற நிலைமைகளைக் காங்கிரசு உருவாக்கும் என்பது மட்டும் உறுதியாக நம்பப்படுகிறது!

'அரசியலிலிருந்து முற்றிலும் விலகி, குருக்ஷேத்திரத்திற்கு அருகில் சமாஜம் ஒன்று நிறுவப்போகிறார்' என்று நந்தா பற்றி முன்னர் செய்தி வெளிவந்தது நினைவிருக்கலாம்.

அவரைக் காங்கிரசு மேலிடம் அழைத்து இதுபோன்ற 'தீவிர' வேலைகளுக்கு அமர்த்தியிருப்பது, பலவித யூகங்களுக்கு வழிகோலுவதாக இருக்கிறது!

சிவாஜியும் 'சிவ சேனை'யும்!

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதே இன்று இந்தித் திணிப்புக்கு இடையூறாக இருப்பதாக எல்லாக் காங்கிரசுத் தலைவர்களும் கதறுகிறார்கள்!

'சிவசேனை'யின் தலைவர் என்று சொல்லப்படுபவரும், தனது வன்முறைப் பட்டாளத்தைக் கலைத்துவிடுவதற்கு, மாநிலங்களின் நலன் பேணும் மனப்பான்மையை—'மாநிலக் கட்சிகளைத் தடை போட்டு அழிக்க வேண்டும்' என்று பேரம் பேசுகிறார்!

தமிழகத்தில் தி. மு. கழகத்தைத் தடை செய்துவிட்டால், பம்பாயில் மராட்டியர்களுக்கு 'நியாயம்' கிடைத்துவிடுமா? குந்தி தேவிக்குக் குழந்தை பிறந்ததைப் பார்த்து, உலக்கையால் தனது வயிற்றில் இடித்துக்கொண்ட காந்தாரியின் வழிவந்த இந்தி வெறியர்கள், 'ஆம்' என்று மராட்டியர்களுக்கு ஆசையூட்டியிருக்கின்றனர்!

தி. மு. கழகம் கலைக்கப்படுவது, காங்கிரசுக் கட்சியினிடமோ, மராட்டியர்களிடமோ இல்லை; அது, தமிழர்கள் வாழ்வோடு இணைந்துவிட்ட அமைப்பாகிவிட்டதை அனைவரும் உணரவேண்டும்.

தி. மு. கழகத்தைத் தனியொரு கட்சியாக நினைத்துக்கொண்டு, அது செய்யும் எக்காரியத்திற்கும் ஏட்டிக்குப் போட்டியாக ஏவிவிடக் காங்கிரசார் கையாளும் 'சிவசேனை'த் தந்திரத்தை, இன்னும் சிறிது நாளில் மராத்தியர்களே அறிந்துகொள்வார்கள்!

தமிழர்கள் எக்காலத்தும் மராத்தியர்களுக்குக் குறுக்காக நிற்கும் சிறுமைச் செயலில் இறங்கவே மாட்டார்கள்! தமிழர்களும், பிற தென்னாட்டவர்களும், மராட்டியத்தில் உடல் உழைப்பை அளிப்பவர்களாகவே இருப்பர்! மராட்டியத்தின் பொருள் வளத்தைச் சுரண்டிக் கொண்டிருப்பவர்கள், தமிழர்களோ தென்னாட்டவர்களோ அல்லர் என்பது—சிவாஜி சேனையின் திரைமறைவு ஆர்ப்பாட்டத்தையும் மீறி—அங்குள்ள மக்களுக்கு விரைவில் புரிந்துவிடும்!

கழகத்தின் ஆட்சி அமைந்ததை அடுத்து, நாலுபக்கங்களிலிருந்தும் காங்கிரசுக் கட்சி கிளப்பும் அவதூறுப் புயலும், தந்திரச் செயலும், சிவாஜி சேனையின் செயல்களுக்குக் காரணமாகும்!

அங்கு அரசியலில் தமிழர்கள், எந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்கள்? வாணிபத் துறையில் எவ்வளவு இலாபத்தைக் குவிக்கிறார்கள்? எந்தவகையில் மராத்தியர்களுக்குக் குறுக்கே நிற்கிறார்கள்?—எவற்றிலுமில்லை; ஆனால், தேர்தல் காலங்களில் காங்கிரசு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடையூறாக அங்கு தென்னாட்டவர்கள் இருக்கிறார்கள்! கிருஷ்ணமேனன், கடந்த தேர்தலில் பெற்ற கணிசமான வாக்குகள், மராத்தியர்களுக்கு அநீதி இழைக்கப்படும் செயல்களுக்கான எண்ணிக்கையாகக் காட்டப்பட்டிருக்கின்றன!

காங்கிரசு வெற்றிபெற வேண்டும் என்பதற்காக எத்தகைய இழிசெயல்களையும் அது செய்யக்கூடும் என்பதை சிவாஜி சேனை தெளிவாக்கிக் கொண்டிருக்கிறது!

சிவாஜி சேனை, மராத்தியர்கள் அனைவருடைய கருத்தையும் பிரதிபலிப்பதல்ல! ஆனால், காங்கிரசின் எதிர்கால வேலைத் திட்டத்தை—மாநிலங்களின் தன்னுணர்வுகளை அழிக்கும் வஞ்சகப் போக்கை—இந்தியைத் திணிப்பதற்கு தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ள தீய வழியைப் பிரதிபலிப்பதாகவே நாம் கருத இடமிருக்கிறது!

சிவாஜி, இந்தியாவுக்குப் பொதுவானவர்! அவர் பெயரைத் தாங்கியிருக்கும் 'சிவாஜி சேனை', இந்தியைத் திணிக்கக் காங்கிரசு ஆதிக்க வெறியர்கள் போடும் திட்டங்களுக்கு அனுசரணையாக வாய்ந்த கருவி!

ஆகவே, பம்பாயில் 'சிவசேனை' நடத்தும் செய்கைகளின் அடிப்படையில், தமிழகத்தில் மராட்டியர் பேரில் வேரூன்றியுள்ள நட்புணர்வும், நல்லெண்ணமும் விவாதிக்கப்படமாட்டா!

—தோழன்

அண்ணா வேண்டுகோள்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கள் இருந்ததால், 'என்ன ஆயிற்று அந்தத் திட்டம்?' என்று கேட்கிற அளவோடு நின்றுவிட்டது! ஆனால் இந்தத் திட்டம், புறக் கூண்டிலே அடைக்கப்படுகிற திட்டம் அல்ல—மக்களுக்காக செய்யப்பட இருக்கும் திட்டம்!

கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய்ச் செலவில் தமிழக அரசு முடிவு செய்து—அறிவித்து—சட்டமன்றத்தின் ஒப்புதலையும் பெற்று நிகழ்த்தப்படுவது இந்தத் திட்டம்!

நம்மிடம் நல்ல ஆற்றல் மிக்க பொறியியல் நிபுணர்கள் இருக்கிறார்கள்!

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் நாடே வியந்து பாராட்டத்தக்க ஆற்றல் மிக்க அந்தப் பொறியியல் வல்லார், விரைந்தும், குறித்ததைவிடச் செலவைக் குறைத்தும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

பின்னொரு நாளில் வந்து பார்க்கிற வெளிநாட்டார், 'ஊர் நடுவே இப்படி ஓர் ஆறா? இப்படியேதான் இருந்ததா?' என்று வியப்புடன் கேட்டால், 'முந்தி இப்படி இருந்ததில்லை; நாம்தான் இப்படி ஆக்கினோம்' என்று பெருமை பேசி மகிழத்தக்க வகையில், இதனைச் சிறப்பாக முடித்துத் தர வேண்டுகிறேன்.

சாதாரணமாய் கடலில் ஆறு கலக்கும் இடத்தை நாம், இப்படிப் பரந்தவெளியாய்க் காண முடியாது!

'பொன்னி' என்று பெருமையாய் பேசப்படும் காவிரி கடலில் கலக்கும் இடத்தில் நாம் நின்று வேடிக்கை பார்க்க முடியாது!

கூவம்—காவிரிபோல் அவ்வளவு அகன்றது அல்ல என்றாலும்—பொறியியல் வல்லுனரின் முயற்சியால் பொதுமக்கள் வந்து உலவிப் பயன்பெறும் இடமாக மாற இருக்கிறது!

மாலை நேரங்களில் குடும்பம் குடும்பமாய் மக்கள் வர—குழந்தைகள் பூங்காவில் உள்ள மலரைத் துடுக்காய்க் கிள்ள—தாய், 'கிள்ளாதே' என்று தடுக்க—'உனக்கு எப்போதுமே இதுதான் பேச்சு' என்று எதையோ நினைத்துக்கொண்டு தகப்பன் சொல்ல—இப்படி, வாழ்வில் இன்பப் பூங்காக்களை அமைக்கும் எழில் தோற்றத்தை உருவாக்குவதுதான் இந்தத் திட்டம்!

நம்முடைய நாட்டில் உள்ளவர்கள், இருக்கின்ற எழிலைப் பாழ்படுத்துவதில் வல்லவர்கள்! நல்ல பூங்காவைக் கண்டால் அதை அழித்தாக வேண்டும்—ஒரு நல்ல கட்டடத்தைக் கண்டால் கரியினால் கோடு போட்டாக வேண்டும்—நல்ல வாய்க்காலைப் பார்த்தால் கல்லை—மண்ணைப் போட்டு அதைத் தூர்த்தாக வேண்டும்—இப்படிப் பட்ட விந்தை மனிதர்கள், உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இருக்கமாட்டார்கள்!

இரண்டு—மூன்று ஆண்டுகட்கு முன்னாலே தாய்லாந்து நாட்டுக்கு நான் போயிருந்தபோது—**பாங்காக் நகரில்** ஒரு நெடுஞ்

சாலையின் நடுவே என்னை அழைத்துச் சென்று, 'இது ஒரு வியாபாரக் கோட்டம்' என்றார்கள்; அப்போது மாலை மணி 5 இருக்கும்; ஊர் நடுவே தண்ணீர் இல்லாத வாய்க்கால்—மணல் பரந்த வெறும் வாய்க்கால் வாயைப் பிளந்துகொண்டு கடலை நோக்கி அமைந்து கிடந்தது; மனிதர் யாருமே இல்லை; 'இதுவா வணிகக் கோட்டம்?' என்றேன்; 'இப்போது பார்தீர்கள் அல்லவா—நாளைக் காலையில் பார்க்கலாம் இதே இடத்தை' என்றார்கள்; மறு நாள் காலை நாங்கள் அங்கே சென்று பார்த்தோம்; காலை 7 மணிமுதல் 10-மணி வரை கடலில் இருந்து நீரை மணல்வெளியில் நிரப்புகிறார்கள்—அப்போது அது, ஆறு போலக் காட்சியளிக்கிறது! அலங்காரப் படகுகள் அதில் அசைந்தாடி வருகின்றன! அவையே பலவகைப் பண்டங்கள் விற்கும் அங்காடிகள்! பண்டங்களை வாங்கச் சிறு சிறு படகுகளில் மக்கள் வந்துபோகிறார்கள்! காண்பதற்கு அரிய—கண்ணுக்கு இனிய காட்சி அது! உள்ளபடியே அது ஒரு வணிகக் கோட்டமாக இருக்கிறது!

12 மணி ஆனதும் இந்த ஆற்று நீரைக் கடலில் வடிய விடுகிறார்கள்; மாலையில் பழையபடி மணற் கால்வாய்; நாளை மீண்டும் நீர் வரும்—அங்காடிகள் தோன்றும்!

அப்படியெல்லாம் தங்கள் தங்கள் நாடுகளில் இயற்கையாய் அமைந்துள்ள வாய்ப்புகளை அழகுபடுத்திப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்!

பொருளாதார நெருக்கடி காரணமாகப் பல திட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், 'இனியும் இந்தக் கூவம் ஆற்றுத் திட்டத்தை ஒத்திவைப்பது கூடாது—காலம் கடத்துவது ஆகாது' என்று எண்ணியே, இந்தத் திட்டத்தை முனைந்து செயல்படுத்துகிறோம். இதை முழு அளவிலே மகிழ்ச்சியுடன் மக்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் திட்டமிட்டிருக்கிறார்கள்!''

அமைச்சர் சாதிக் பாட்சா

பொதுநலத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பல ஆண்டுகள் கனவு கண்ட திட்டம் இப்போது நனவாகப் போகிறது!

முடைநாற்றமெடுத்த இந்தக் கூவத்தைச் சீராக்கி அழகுபடுத்தும் சிறப்பான திட்டத்துக்கு, பொதுநலத்துறையைச் சார்ந்த கடமைமிக்க அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று உறுதி கூறுகிறேன்.''

அமைச்சர் கோவிந்தசாமி

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் சொன்னதாவது:—

"துர்நாற்றமிக்க கூவம் ஆற்றை அழகுள்ளதாக ஆக்கிக் குழந்தைகள் ஆடும் பூங்காக்களையும் அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சியை வாழ்த்தும் வகையிலும், ஒத்துழைக்கும் முறையிலுமே நான் இதில் கலந்துகொள்கிறேன்.

ஏனென்றால், கழிவு நீரிலே விவசாயம் செய்துகொள்ளுவோம் நாங்கள்.

சென்னை மாநகராட்சியினர் கழிவு நீரைப் பயன்படுத்திக் கால்நடைத் தீவனமாகப் புல் வளர்க்கிறார்கள்,

நீங்கள் எல்லாம், 'கழிவு' என்று ஒதுக்கிவிடுகிற நீரைப் பயனுள்ள வழியில் செலவிட விவசாயத்துறை வேண்டிய வகையில் ஒத்துழைக்கும் என்று உறுதி கூறுகிறேன்.''

[பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் பேச்சு நாளை வெளிவரும்.]

சி. ஆர். பாலசுந்தரம் மறைவு

சென்னை, செப். 20—

சென்னை 26-வது வட்ட முன்னாள் மாநகராட்சி உறுப்பினரும் கழகத் தோழரும், பல்வேறு பொது அமைப்புகளில் தொடர்பு கொண்டவரும், கௌரவ மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றி வந்தவருமான திரு. சி. ஆர். பாலசுந்தரம் நேற்று இரவு இயற்கையெய்திய செய்தியை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

தோழர் பாலசுந்தரம் அவர்களைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்.

இலட்சுமிபுரம் யுவர்சங்கத்தில்

அண்ணா படத் திறப்பு

சென்னை — இராயப்பேட்டையில் உள்ள இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் 21—9—67 மாலை 7-30 மணிக்கு அறிஞர் அண்ணா படம் திறந்து வைக்கப்படும்.

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. பஷீர் அகமது விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

திரு. இராம. அரங்கண்ணல். அரசுத் தலைமை வழக்கறிஞர் திரு, கே. நாராயணசாமி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

அண்ணா பிறந்த நாள் விழாப்

பொதுக்கூட்டங்கள்

21--9--67

மேல்மலையனூர்

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் இரவு 7 மணிக்கு எம்.வி. மதுரை முத்து அரங்கில்; தலைவர்: ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ.; பேசுவோர்: தியாகபத்திரன், கே.எம். தனபால்.

(மோகனா-சதாசிவம் குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

கோவை 29-வது வட்டம்

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் இரவு 7 மணிக்கு அழகிரி திடலில் அமைச்சர் கே.ஏ. மதியழகன் பேசுவார்.

இரவு 8 மணிக்கு 8-வது வட்டம் முருகன் மில் அருகில் து.ப. அழகமுத்து எம்.எல்.ஏ., எஸ். ஜே. இராமசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுவர்.

சிவகாசி

அண்ணா மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மணிக்கட்டி ஊரணித் திடலில்; தலைவர்: கருக்குவேல்ராசன்; பேசுவோர்: இளமுருகு பொற்செல்வி, எஸ்.பி. மணியம், துரைக்கண்ணன், வே. கருணாகரன்.

குடந்தை

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு ஆழ்வார் கோயில் திடலில்; தலைவர்: கோ. தட்சணாமூர்த்தி; பேசுவோர்: வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சு. பத்மநாபன், பி.வி. செயராமன்.

நாகை

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு அபிராமியம்மன் கோயில் திடலில்; தலைவர்: என். திருவேங்கடம்; பேசுவோர்: எல். கணேசன் பி.ஏ.,பி.எல்., எஸ். தியாகராசன் பி.ஏ.,பி.எல்., எஸ். யூசுப்சா, எஸ். முருகையன் பி.ஏ.,பி.எல்.

மு. களத்தூர்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கே.வி.கே. சாமி திடலில்; தலைவர்: பி.வி.எஸ். கிருட்டினசாமி; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, எஸ்.கே. வடிவேல் எம்.எல்.ஏ., மே. சங்கப்பிள்ளை, கே.பி. இரத்தினம், ச. கந்தசாமி, கே.எம். இராமலிங்கம், கே.பி. சுப்பையா, இரா. பெருமாள்.

கன்னிவாடி

தி.மு. கழகம் — எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு சவகர் திடலில்; தலைவர்: தி.ச. முத்துச்சாமி; பேசுவோர்: எஸ். நெல்லைமாறன், இரா. தமிழ்மாறன், செ. தம்பித்துரை, சு. கிருட்டினமூர்த்தி, ப. காத்தமுத்து, இரா. சோனைமுத்து, த. பழனியப்பன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை 13, [illegible]